## முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு நிறுவனம் - 2019

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள முகாமைத்துவம் தொடர்பான பட்ட நிலை பின்படிப்பு நிறுவனத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள முகாமைத்துவம் தொடர்பான பட்ட நிலை பின்படிப்பு நிறுவனத்தின 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கயில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மீது அடிப்படையாகக் கொண்டு எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3. நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு-வொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்வி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து முகாமைத்துவம் தொடர்பான பட்ட நிலை நிறுவனத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது முகாமைத்துவம் தொடர்பான பட்ட நிலை பின்படிப்பு நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல்,

வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச் செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் கிடைக்கப்பெற வேண்டிய கற்கை நெறிகளின் நட்டங்களின் பெறுமதியாக ரூபா. **24,775,292** ஐ வருமானத்திற்கு பதிவழிக்கப்பட்டிருப்பினும், குறித்த நட்டங்களின் பெறுமதி கணக்கிடும் விபரங்கள் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தவில்லை என்பதுடன், குறித்த பதிவழித்தலுக்காக நிருவாகச் சபையின் அனுமதி பெற்றுக் கொள்ளப்படவில்லை. | கற்கை நெறிகளை விட்டுச் சென்ற மாணவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை பணத் தொகை முகாமைத்துவ சபையின் தழுவு அங்கீகாரத்திற்கு அமைவாக மீளாய்விற்கான ஆண்டின் வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டது. இது தொடர்பாக எதிர்வரும் முகாமைத்துவ சபை கூட்டத்திடம் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | முறையான அனுமதி பெற்றுக்கொண்டதன் பின்னர் பதிவழித்தலை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) மீளாய்விற்கான ஆண்டில் தனியார் கம்பெனியொன்றில் நிறைவேற்று அலுவலர்களின் பொருட்டு நடாத்தப்பட்ட கற்கைநெறி பொருட்டு கற்கை நெறி கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கையில் ரூபா. **878,125** ஆன தொகை கிடைக்கப்பெற வேண்டிய கற்கைநெறி கட்டணங்களாக **2019** திசெம்பர் 31 ஆந் திகதியில் கணக்கு வைக்கப்பட்டதன் காரணமாக ஆண்டில் வருமானம் மற்றும் நடைமுறை சொத்துக்கள் அந்த தொகையில் நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட குறைப்பாடுகளை எதிர்வரும் நிதியாண்டில் செவ்வையாக்கி சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வருமானங்களை சரியாக அடையாளம் காணப்பட்டு கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (இ) மீளாய்விற்கான ஆண்டில் கொள்வனவு செய்திருந்த மொத்தம் ரூபா. **786,888** ஆன பட்டமளிப்புகளுக்கான நீண்ட மேலங்கிகள் மற்றும் அலுவலக உபகரணங்களை மூலதனமயப்படுத்தலுக்குப் பதிலாக மீண்டுவருஞ் செலவினமாக நிதி செயலாற்றுகை கூற்றில் இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. | பட்டமளிப்பு நீண்ட மேலங்கிகளை கொள்வவு செய்தலானது, வகைப்படுத்தல் குறைப்பாடு காரணமாக மூலதனமயப்படுத்தப்படவில்லை. ரூபா. **198,150 /-** இற்கு கொள்வனவு செய்த கணினி துணைக் கருவிகளில் ஆயட் காலத்தை கவனத்தில் கொண்டு அதனை வருமான செலவினமாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | மூலதன மற்றும் மீண்டுவரும் செலவினங்களை செவ்வையாக வகைப்படுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) தனியார் கம்பெனியில் நிறைவேற்று அலுவலர்களின் பொருட்டு 2019 நவம்பர் 26 ஆந் திகதி தொடக்கம் **2020** யூன் **30** வரை நடாத்தப்பட்ட கற்கைநெறி பொருட்டு எதிர்வரும் ஆண்டுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா. **1,653,857** ஆன தொகை, மீளாய்விற்கான ஆண்டில் வழுவாக ஆண்டில் கற்கைநெறி வருமானத்தில் குறைக்கப்பட்டு முன் கிடைக்கப்பெற்ற வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. ஆகையால் ஆண்டின் வருமானம் அந்த அளவில் குறைவாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். சம்பந்தப்பட்ட வழுக்களை எதிர்வரும் நிதியாண்டில் செவ்வையாக்கி சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கிடைக்கப் பெற வேண்டிய வருமானத்தை அடையாளம் காணப்பட்டு சரியாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை** | | | |
| **(i)**நிதி ஒழுங்குவிதி 371 (2) (ஆ) மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதி **3/2015** ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | நிமித்த முற்பணம் வழங்க முடியுமான உச்சவெல்லை ரூபா. **100,000** ஐ விஞ்சி, இரண்டு அலுவலர்களுக்கு 02 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா. **295,000** ஐ முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. | அத்தியாவசிய சந்தர்ப்பங்களில் மட்டும் பணத்தால் முற்பணம் வழங்கப்படும். முற்பணம் தேவைப்படும் அலுவலுக்கமைவாக நிதி ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லையை விஞ்சுதலும் ஏற்படுகின்றது. | நிதி ஒழுங்குவிதி மற்றும் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு ஒழுங்கமைதல் வேண்டும். |
| **(ii)**நிதி ஒழுங்குவிதி **371 (5)** மற்றும் **2015** யூலை **14** ஆந் திகதிய **3/2015** ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | பெற்றுக்கொண்ட நிமித்தக் கட்டுநிதி முற்பணங்களை உரிய பணி முடிவடைந்தவுடன் அல்லது பத்து நாட்களுக்குள் சீராக்குதல் வேண்டுமாயினும், 10 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த மொத்தம் ரூபா. **740,016** ஆன முற்பணங்களை மீள செலுத்த- | பெற்றுக்கொண்ட முற்பணங்களில் எஞ்சிய மீதிகளை தாமதமின்றி தீர்க்கப்பட்டுள்ளது. முற்பணம் தீர்ப்பதற்கு ஏற்புடையதான நாளேட்டுக் குறிப்புகளை வைக்கும் போது பெரும்பாலும் தாமதங்கள் ஏற்படுவதுடன், | நிதி ஒழுங்குவிதி மற்றும் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு ஒழுங்கமைதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | லானது 15 நாட்கள் தொடக்கம் 224 நாட்களுக்கிடையிலான காலவெல்லை தாமதமாகியிருந்தன. | குறித்த தாமதங்களை குறைத்துக் கொள்வதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | |
| (ஆ) **1985** ஆம் ஆண்டு **3** ஆம் இலக்க முகாமைத்துவம் தொடர்பான பட்ட நிலை பின்படிப்பு நிறுவனங்களின் விதிக் கோவையில் 11 ஆவது பிரிவு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, மற்றும் உயர் கல்வி தாபன விதிக் கோவையில் 3 ஆவது பந்தியில் 26 ஆவது பிரிவு | நிறுவனத்தின் பணிப்பாளர் ஆகக் குறைந்த செலவில் ஆகக் கூடிய செயலாற்றுகையை பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் வெளியக விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாயினும், வெளியக விரிவுரையாளராக தன்னையே நியமனம் செய்து கொண்டு தமது பதவிக்கு கிடைக்கும் சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக ஒரு மணித்தியாலத்திலான ரேட்டுக்கு அமைவாக ரூபா. **1,058,750** ஐ மீளாய்விற்கான ஆண்டில் விரிவுரைகளுக்கான கட்டணங்களாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | பணிப்பாளர் உள்ளக விரிவுரைகளை நடாத்தல் பொருட்டு, வெளியக விரிவுரையாளர்களுக்கு செலுத்துகின்ற கட்டணங்களை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவ சபையால் மேற்கொண்டுள்ள தீர்மானத்திற்கு அமைவாக 1987 ஆம் ஆண்டில் கொடுப்பனவுகளை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து பரிந்துரை கிடைக்கும் வரை இடை நிறுத்தப்பட்டுள்ளது. | உரிய ஒழுங்கு விதிகளுக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) **2015** மே **15** ஆந் திகதிய **01/2015/01** ஆம் இலக்க நி.அ. சுற்றுநிருபம். | சுற்றுநிருபத்தின் 3 (ஆ) பிரிவு பிரகாரம் “நாட்டில் நிறைவேற்ற முடியாத நிறுவனத்தின் விடய வெல்லைக்குள் வருகின்ற சம்பந்தப்பட்ட கடமையின் பொருட்டு வெளிநாடு செல்கின்ற அலுவலர் ஒருவருக்கு’ அமய படிகளும், 4 ஆவது பிரிவு பிரகாரம் இணைந்த படிகளும், 6 ஆவது பிரிவு பிரகாரம் மீளளிப்புச் செய்வதற்கு முடியுமான செலவினமும் மட்டும் செலுத்தப்படல் வேண்டும். ஆயினும் ஐந்து வெளிநாடுகளில் நடாத்தியிருந்த கலைமானி பட்டப்படிப்பு கற்கை நெறிகளில் போதனைகளை நடாத்துவதற்கு சென்றிருந்த நிறுவனத்தின் கல்விசார் பணியாற்றொகுதியில் 05 விரிவுரையாளர்களுக்கு ஒரு மணித்தியாலத்திற்கு | வெளிநாட்டு பட்ட நிலை பின்படிப்பு கற்கை நெறிகளில் விரைவுரைகளை நடாத்துவதற்கு அதிக முயற்சி எடுக்க வேண்டி ஏற்படுதல் மற்றும் அதற்கு எடுக்கின்ற காலப் பகுதி என்பவற்றை கவனத்தில் கொண்டு வெளியக விரிவுரையாளர்களின் பொருட்டு செலுத்தப்படுகின்ற தொகையினை, உள்ளக பூரண கால பணியாற்றொகுதியினறுக்கும் வழங்கப்பட வேண்டுமென 2016 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சபையால் மேற்கொண்ட தீர்மானத்திற்கு அமைவாக உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. கணக்காய்வு அவதானிப்பின் மீது | சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு ஒழுங்கமைதல் வேண்டும். |

| | |
|---|---|
| ரூபா. **11,000** படி மொத்தம் ரூபா. **6,695,750** ஆன தொகை அவர்களது நிரந்தர சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக மீளாய்விற்கான ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. | கவனம் செலுத்தப்பட்டு இந்த கொடுப்பனவு செலுத்தலை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைபயன்**

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயனாக ரூபா. **78,350,275** ஆன மிகை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் மிகை ரூபா. **136,085,005** ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா. **57,734,730** ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு சர்வதேச பயிற்சி கற்கை நெறிகளின் கட்டணங்கள் குறைவடைதல் மற்றும் கற்கை கொடுப்பனவுகள் அதிகரித்தல் என்பன காரணங்களாகின.

**3. தொழில்பாட்டு மீளாய்வு**

**3.1 தொழில்பாட்டு வினைதிறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டில் ரூபா.**14,113,056** இற்கு நுகர்வோர் பொருட்களை கொள்வனவு செய்திருந்ததுடன், அதில் ரூபா. **8,457,474** ஐ அல்லது 60% தொடர்பில் மட்டும் களஞ்சிய நிருவாக முறைமைகள் பின்பற்றியிருப்பினும், நிரந்தர பண்டசாலை காப்பாளரை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட-வில்லை. ஆண்டு இறதியில் ரூபா. **4,619,560** ஆன பொருட்கள் எஞ்சியிருந்ததுடன், எஞ்சிய தொகையில் ரூபா. **1,989,715** அல்லது 43% 06 மாதங்களுக்கும் அதிகமான காலப் பகுதி தொடக்கம் பயன்பாட்டில் உள்ளமை அவதானிக்கப்பட்டது. நுகர்வோர் பொருட்-களை கொள்வனவு செய்கையில் ரூபா. **5,635,581** அதாவது 40 % தொடர்பில் பண்டசாலை நிருவாக முறைகளை பின்பற்-றாது நேரடியாக சம்பந்தப்பட்ட பிரிவுகளிடம் அனுப்பி வைத்து கணினி குறிப்பினை மட்டும் பேணிச் சென்றிருந்ததுடன், உரிய பொருட்-களை கோருதல், கொள்வனவு செய்தல், வழங்குதல் மற்றும் எஞ்சிய இருப்புகளின் மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏற்புடையதான நிருவாக முறைகள் எதனையும் பின்பற்றியிருக்கவில்லை. | கருத்துகளை சமர்ப்பிக்கப்படவில்லை. | முறையான களஞ்சிய நிருவாக முறைமை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தல் வேண்டும். |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பணியாற்தொகுதி மற்றும் கல்விசாரா பணியாற்தொகுதி ஒழுங்குமுறையில் 18 மற்றும் 26 ஆவதுடன், அதில் முறையாக 03 பதவிகளில் மற்றும் 09 பதவிகளில் வெற்றிடங்கள் நிலவின. | வெற்றிடமாகவுள்ள விரிவுரையாளர் பதவிகளை நிரப்புவதற்கு 2020 ஆண்டில் விண்ணப்பங்களை கோரப்பட்டு, உரிய ஆட்சேர்ப்புத் திட்டங்களை பின்பற்றி சிரேட்ட விரிவுரையாளர் 11 தரத்தின் இரண்டு வெற்றிடங்களை நிரப்பு-வதற்கு ஆட்சேர்பபுச் செய்யப்பட்-டுள்ளது. வெற்றிடமாகவுள்ள எஞ்சிய விரிவுரையாளர் பதவிக-ளுக்கு எதிர்வருங் காலங்களில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 4. கணக்கீட்டு நெறிமுறை மற்றும் நல்லாட்சி

### 4.1 நிலைபேண்தகு அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலையான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ''நிகழ்ச்சி நிரல்'' பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனத்தாலும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாயினும், மீளாய்-விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின் படிப்பு நிறுவனத்தால் தமது விடயவெல்லைக்குள் வருகின்ற அலுவல்-கள் தொடர்பில் எவ்வாறு செயற்படுதல் வேண்டும் என்பது தொடர்பாக போதிய-ளவு புரிந்துணர்வுடன் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. அதன்படி ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரல் பிரகாரம் நிறுவனத்தின் அலுவல்க-ளுடன் தொடர்புபட்ட நிலையான அபிவிரு-த்தி இலக்குகள் மற்றும் குறித்த இலக்குகளை அடைந்துக்கொள்ள வேண்-டிய திருப்புமுனைகளும், இலக்குகளை அடைந்துக் கொள்வதனை அளவிடும் சுட்டிகளையும் நிறுவனத்தால் அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டி-ருக்கவில்லை. | நிலையான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்கு-கள் மற்றும் அதற்கான சுட்டிகள் எதிர்வருங் காலத்தில் தயாரிக்கப்-பட்டு அதன்படி செயலா-ற்றுவதற்கு இனிவருங் காலங்களில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றுநிருபம் பிரகாரம் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடை-யாளம் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |